01.08.2025 SC.No. 57/2014

சாட்சி : PW1 பாஸ்கரன்

சாட்சி மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் திரும்ப வர அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

ஏற்கனவே நீதிமன்றத்தில் நான் எதிரி என்னை அரிவாளால் வெட்டியதாக சாட்சியம் அளித்துள்ளேன், நீதிமன்றத்தில் தற்போது காண்பிக்கப்படும் அந்த அரிவாள் தான் எதிரி என்னை வெட்ட பயன்படுத்திய அரிவாள் ஆகும். **அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

1.ஏற்கனவே நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்க வந்த போது சா.பொ. 1 அரிவாளை நான் நீதிமன்றத்தில் பார்க்கவில்லை என்றால் பார்த்தேன், அப்போது நான் இந்த அரிவாள் தான் என அடையாளம் காட்டினேனா என்றால் அடையாளம் காட்டினேன். அந்த அரிவாளை யார் கைப்பற்றி கொண்டு வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி என்னை பார்க்கவும் இல்லை அரிவாளால் என்னை வெட்டவும் இல்லை என்றும் நான் முன்விரோதத்தின் அடிப்படையில் எதிரி என்னை வெட்டியதாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதே போன்று சா.பொ.1 அரிவாள் என்னால் உற்பத்தி செய்யப்பட்டு போலீஸாரிடம் என்னால் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதே போன்று இந்த ஆயுதத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.